பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**15 05 2026** **FRIDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி அரசுமுறைப் பயணமாக இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் புறப்பட்டு சென்றார்.

2. பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு பன்முகத் தன்மையை கொண்டுவருவதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான நீட் மறு தேர்வு அடுத்த மாதம் 21-ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

4. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளதையடுத்து, நாட்டில் பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாயும், டீசல் லிட்டருக்கு 2 ரூபாயும் உயர்த்தப்படுவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

5. இஸ்தான்புல் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Sutirtha Mukherjee — Ayhika Mukherjee** இணை பட்டம் வென்றது.

... இனி விரிவான செய்திகள்

<<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி அரசுமுறைப் பயணமாக இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் புறப்பட்டு சென்றார்.

இப்பயணத்தின்போது நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்கும் பிரதமர் செல்கிறார்.

தமது பயணத்தின் முதல் கட்டமாக, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபர் திரு ஷேக் முகமது பின் சையத் அல்நஹ்யானுடன் பிரதமர் இருதரப்பு பேச்சுக்கள் நடத்த உள்ளார்.

எரிசக்தி ஒத்துழைப்பு, மண்டல மற்றும் சர்வதேச விஷயங்கள் குறித்தும் பிரதமர் பேச்சு நடத்த உள்ளார்.

இருதரப்பு ஒட்டுமொத்த பொருளாதார ஒத்துழைப்பு குறித்து பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

அரசியல், கலாச்சாரம், பொருளாதாரம், மக்கள் தொடர்பு உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும், எரிசக்தி பாதுகாப்பு குறித்தும் இரு தலைவர்களும் ஆலோசிக்க உள்ளனர்.

பிரதமரின் ஆறு நாட்கள் பயணம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை கூடுதல் செயலர் திரு அசீம் மகாஜன், எரிசக்தி தொடர்பான இருதரப்பு பேச்சுக்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதாக தெரிவித்தார்.

இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் வழங்கும் நான்காவது பெரிய நாடாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ள நிலையில், நாட்டின் 11 சதவீத தேவையை அந்நாடு பூர்த்தி செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நாட்டில் இருந்து திரவ இயற்கை எரிவாயுவையும் அதிக அளவில் இந்தியா இறக்குமதி செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

தமது பயணத்தின் இரண்டாவது கட்டமாக நெதர்லாந்து செல்லும் பிரதமர், அந்நாட்டு அரசர் வில்லியம் அலெக்சாண்டர் மற்றும் அரசியார் மேசிமாவையும் சந்திக்க உள்ளார்.

நெதர்லாந்து பிரதமர் திரு **Rob Jetten**-ஐ சந்தித்து பேசும் திரு நரேந்திர மோடி, பாதுகாப்பு, ராணுவ ஒத்துழைப்பு, பசுமை ஹைட்ரஜன், செமி கண்டெக்டர் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் பேச்சு நடத்த உள்ளார்.

<<<<<<<<>>>>>>>>

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுடன் இணைந்து செயல்பட்டு பன்முகத் தன்மையை கொண்டுவருவதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று பிரிக்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், உறுப்பு நாடுகளின் அனைத்துத்

தலைவர்களுக்கும் வாய்ப்பளித்து பன்முக ஒத்துழைப்புக்கு இந்தியா துணை நிற்கும் என்றும் கூறினார்.

மாறிவரும் உலக சூழலுக்கு ஏற்ப, ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

சர்வதேச நிதி கட்டமைப்பில் உடனடி சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அனைத்து நாடுகளுக்கும் சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

முன்னதாக, ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு **Abbas Araghchi,** டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேசினார்.

இதுகுறித்து டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மேற்காசியாவில் நிலவும் சூழல் மற்றும் அதன் தாக்கங்கள் குறித்து இருவரும் விரிவாக ஆலோசித்ததாக தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு குறித்தும் விவாதித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிக்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கும் திரு **Abbas Araghchi**-க்கு தமது பாராட்டுகளை தெரிவித்ததாகவும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>>

இளநிலை மருத்துவப்படிப்புகளுக்கான நீட் மறு தேர்வு அடுத்த மாதம் **21**-ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வுகள் முகமை அறிவித்துள்ளது.

கடந்த மூன்றாம் தேதி நடைபெற்ற நீட் தேர்வு வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானதையடுத்து, அந்த தேர்வு முடிவுகள் ரத்து செய்யப்பட்டது.

இந்த முறைகேடு தொடர்பான வழக்கில் சிபிஐ தீவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளது.

நீட் தேர்வு தொடர்பான தகவல்களை தேசிய தேர்வு முகமையின் அதிகாரப்பூர்வ இணையதளங்கள் மூலமாகவே தேர்வர்களும், அவர்களின் பெற்றோர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், நீட் தேர்வை எவ்வித முறைகேடும்

இன்றி வெளிப்படைத் தன்மையுடன் நடத்தும் வகையில் வரும் ஆண்டுமுதல் இந்த தேர்வு ஆன்லைனில் நடத்தப்படும் என்று கூறினார்.

தேசிய தேர்வு முகமையின் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய திரு பிரதான், இதனால் எதிர்காலத்தில் முறைகேடுகள் நிகழாமல் வெளிப்படைத் தன்மையுடன் தேர்வுகளை நடத்துவதற்கான சூழல் உருவாக்கித் தரப்படும் என்றும் தெரிவித்தார்.

தகுதிமிக்க மாணவர்களுக்கு வாய்ப்புகள் உறுதி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 21-ஆம் தேதி நடைபெறவுள்ள நீட் மறு தேர்வுக்கான ஹால் டிக்கெட் 14-ஆம் தேதி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த மறு தேர்வின்போது O M R படிவத்தை பூர்த்தி செய்வதற்கு கூடுதலாக 15 நிமிடம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

நீட் மறுதேர்வுக்கு கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது என்றும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததையடுத்து, நாட்டில் பெட்ரோல், டீசல் விலை இன்று உயர்த்தப்பட்டுள்ளது.

பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாயும், டீசல் விலை லிட்டருக்கு 2 ரூபாயும் உயர்த்தப்படுவதாக எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

சென்னையில் பெட்ரோல் ஒரு லிட்டர் 103 ரூபாய் 90 பைசாவுக்கும், டீசல் ஒரு லிட்டர் 95 ரூபாய் 47 பைசாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

புதுதில்லியில் இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, தற்போது பெட்ரோல் விலை மூன்று புள்ளி இரண்டு சதவீதமும், டீசல் விலை மூன்று புள்ளி நான்கு சதவீதமும் உயர்த்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேற்காசியாவில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக மற்ற உலக நாடுகளில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளதாக அவர் கூறினார்..

நாட்டின் பொருளாதாரத்தையும், மக்கள் நலனையும் பாதுகாக்கும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்த போதிலும், வரிகளை குறைத்து பெட்ரோலியப் பொருட்களின் விலையை உயர்த்தாமல் இருந்ததாகவும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் விமான போக்குவரத்து திட்டங்கள் குறித்து சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு, அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, திரு ராம்மோகன் நாயுடு வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படும் என்று கூறியுள்ளார்.

இதனால், மாநிலங்களுக்கு இடையிலான விமான போக்குவரத்து கட்டமைப்பு வலுப்பெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விமான போக்குவரத்து கட்டமைப்பை மேம்படுத்துவதன் மூலம் உள்ளார்ந்த வளர்ச்சியை கொண்டுவர முடியும் என்ற பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையுடன் இந்த திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியின் புதிய அமைச்சரவை வரும் திங்கட்கிழமை பதவியேற்க உள்ளது.

திருவனந்தபுரத்தில், அம்மாநில ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், புதிய முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்புறுதியும் செய்து வைக்கிறார்.

முதலமைச்சராக திரு **V D Satheesan** பதவியேற்க உள்ளார்.

<<<<<<<<>>>>>>>

தில்லியில் மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு பொதுமக்கள் சிரமமின்றி செல்வதற்காக ஹைட்ரஜன் பேருந்து சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தில்லி மெட்ரோ ரயில் நிறுவனம், மத்திய அரசின் பெட்ரோலியத் துறையுடன் இணைந்து, இந்த திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

பொதுமக்களிடம் எரிபொருள் நுகர்வை குறைப்பது மற்றும் பொது போக்குவரத்தை பயன்படுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்

வகையில் இந்த புதிய ஹைட்ரஜன் பேருந்து சேவை கொண்டுவரப்பட்டுள்ளதாக தில்லி மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த பேருந்தில் **35** பேர் பயணம் செய்யலாம். ஜி பி எஸ் வசதியுடன் கூடிய இந்த பேருந்தில் பல்வேறு பாதுகாப்பு அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

வாரத்தின் அனைத்து நாட்களிலும் அலுவலகத்திற்கு செல்லும் நேரங்களில் மக்கள் வசதிக்காக இந்த சேவை தொடங்கப்பட்டுள்ளதாகவும் தில்லி மெட்ரோ ரயில் நிறுவனம் கூறியுள்ளது.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இஸ்தான்புல் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Sutirtha Mukherjee — Ayhika Mukherjee** இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **11-8, 12-10, 3-11, 12-10** என்ற செட் கணக்கில், தைவானின் **Chien — Lee** இணையை வென்றது.

---------------

உலக உஷு சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் **Macau**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **60** கிலோ எடைப்பிரிவில் கரீனா கௌஷிக்கும், ஆடவர் **56** கிலோ எடைப்பிரிவில் சாகர் தாஹியாவும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

---------------

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போடியில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் — சிராக் ஷெட்டி இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **21-12, 21-13** என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Takumi Nomura — Yuichi Shimogami** இணையை வென்றது.

--------------

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு மணி **7.30**-க்கு தொடங்குகிறது.

-------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் முகமதன் அணி இன்று மும்பை அணியை எதிர்கொள்கிறது.

**<<<<<<<<<END>>>>>>>>**